ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2102/2 - 2018 දෙසැම්බර් මස 17 වැනි සඳුදා - 2018.12.17

*2102/2 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

ச. அ. இல. : பிஎஸ்/சிஎஸ்ஏ/00/1/14/1

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அதிமேதகு மைத்திரிபால சிறிசேன அவர்களினால்**

(முத்திரை)

மைத்திரிபால சிறிசேன.

1. கௌரவ அனில் குணரத்ன அவர்கள், உச்ச நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி
2. கௌரவ எத்தாவுட ஆரச்சிகே காமினி ரோஹன் அமரசேக்கர அவர்கள், மேல் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி
3. கௌரவ பியசேன ரணசிங்க அவர்கள், மேல் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி
4. திரு. மல்லவாராச்சிகே தொன் அந்தனி ஹரல்ட் அவர்கள், ஓய்வுபெற்ற பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
5. செல்வி வசந்தா ஜயசீலி கப்புகம கீகனகே, பணிப்பாளர் நாயகம், இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை

ஆகியோருக்கு,

*வாழ்த்துக்கள் !*

விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் (393 ஆம் அத்தியாயம்) 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய என்னால், 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதிய அதிகாரப் பத்திரத்தின் மூலம் வ/ப ஸ்ரீ லங்கன் எயார்லயின்ஸ் கம்பனி, வ/ப ஸ்ரீ லங்கன் கேட்டறிங் கம்பனி மற்றும் வ/ப மிஹின் லங்கா (தனியார்) கம்பனி தொடர்பில் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பாக விசாரணை மற்றும் பரிசோதனை செய்யும் சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் ;

இவ்விசாரணைகள் மற்றும் புலனாய்வுகளின் போது கையளிக்கப்பட்டுள்ள கடமைப் பொறுப்பை உற்பத்திப் பெருக்கம் மிக்கதாக நிறைவேற்றும் பொருட்டு ஆணைக்குழுவிற்கு மேலதிக அதிகாரங்கள் தேவைப்படுகின்றதென ஆணைக்குழுவினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாதலாலும் ;

1A - G 29100 — 372 (2018/12)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2008 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் (393 ஆம் அத்தியாயம்) 8 (1) (அ) ஆம் பிரிவின்கீழ் குறிப்பாகக் காட்டப்பட்டுள்ள அதிகாரங்களும் இவ் ஆணைக்குழுவிற்கு மேலும் என்னால் கையளிக்கப்படுகின்றது என்பதை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தங்களின் விவேகம், திறமை, நேர்மை என்பன பற்றி மிகுந்த நம்பிக்கையும், பற்றுறுதியும் கொண்டு மேற்போந்த அதிகாரத்தின் மூலம் தாபிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவின் சொல்லப்பட்ட அதிகாரப்பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள பணிகளைச் செயற்படுத்துவதற்குத் தேவைப்படக்கூடிய எல்லா நடவடிக்கைகளையும் எடுக்குமாறு தங்களை நான் இத்தால் பணிக்கின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலாஞ்சனையின் கீழ் இரண்டாயிரத்துப்பதினெட்டாம் ஆண்டு திசெம்பர் மாதம் 12 ஆம் நாளாகிய இன்று கொழும்பில் அளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

உதய ஆர். செனெவிரத்ன,
சனாதிபதியின் செயலாளர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.